(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 11.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2020 செப்தெம்பர் 24 வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 ஆம் அண்டில், பயணிகள் போக்குவரத்திற்காக —

(i) புகையிரதத்தைப் பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கையையும்;

(ii) பயணிகள் போக்குவரத்தினால் கிடைத்த வருமானத்தையும்;

(iii) அச்சிடப்பட்ட புகையிரத அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கையையும்;

(iv) புகையிரத அனுமதிச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிட்ட தொகையையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்திற்காக நாளொன்றில் ஈடுபடுத்த வேண்டிய புகையிரதப் பயணத்தடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பொதுவாக நாளொன்றில் ஈடுபடுத்தப்படும் புகையிரதப் பயணத்தடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

51/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் முதலாவது கொவிட்-19 நோயாளி அடையாளம் காணப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்திகதி முதல் இன்று வரை நாளாந்தம் அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 தொற்றியுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அத்திகதி முதல் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். (PCR - Polymerase Chain Reaction) பரிசோதனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கொவிட்-19 நோயை தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

94/2020

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உயிரியல் ஆயுதப் பாவனை தடைசெய்யப்பட்டிருந்தாலும் பல்வேறான அரசியல் மற்றும் வர்த்தக உத்திகளுக்காக இரகசியமாக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) இலங்கை உட்பட குறை அபிவிருத்தி நாடுகள் இந்த உயிரியல் ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நாடுகளாக இலக்கு வைக்கப்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரியல் ஆயுதத் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

113/2020

கௌரவ சாந்த பண்டார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதி அமைச்சினால் சமாதான நீதவான் நியமனங்கள் வழங்கப்படுகின்றது என்பதையும்;

(ii) சமாதான நீதவான்கள் பாரிய சமூக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சமாதான நீதவான்களை நியமிக்கும் போது கருத்திற் கொள்ளும் ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) க.பொ.த.(சா.த) கல்வித் தகைமையுடைய சமூக சேவையாளர்கள் பலர் கிராமிய மட்டத்தில் இருக்கின்றனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறான சமூக சேவையாளர்களுக்கு சமாதான நீதவான் பதவி வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5.

116/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,—போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு டிப்போக்களிலும் தற்சமயம் சேவையில் ஈடுபடுவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போக்களிலும் உள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) குருநாகல் மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் பேருந்து தொகுதிகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

120/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதையை அபிவிருத்தி செய்வதற்குரிய கருத்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துக்கு குறித்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறை யாதென்பதையும்;

(iii) அதற்கான ஒப்பந்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தத்திற்கான பணிகளை நிறைவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

126/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதான குளங்களில் ஒன்றான நஞ்சுண்டான் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கான கடந்த அரசாங்கத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக பெய்துவந்த மழையின் காரணமாக குறிப்பிட்ட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் ஒதுக்கமானது திருப்பியனுப்பப் பட்டுள்ளது என்பதையும்;

(ii) இக்குளத்தின் நீரைப் பெறுகின்ற பெருமளவிலான வயல்களும் மேட்டு நிலங்களும் காணப்படுவதோடு கிராமிய மக்கள் தமது வாழ்வாதாரத்தின் பொருட்டு இக்குளத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதையும்;

(iii) நஞ்சுண்டான் குளக்கட்டிலுள்ள அநாவசியமான மரங்களை வெட்டி அகற்றுவதற்கு மரக் கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் போக்குவரத்துக்கான வீதி சேதமடைந்துள்ளதனால் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி நஞ்சுண்டான் குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) போக்குவரத்துக்கான வீதி புனரமைக்கப்பட்டு, மேற்படி குளத்தின் புனரமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

158/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவிற்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றதான வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக ஐந்து நீர் இறைக்கும் பம்பியறைகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த ஐந்து பம்பியறைகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவானது ஒவ்வொரு பம்பியறையின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஐந்து பம்பியறைகளில் தற்போது முழுமையாக பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பம்பியறைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) பணிகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள ஒவ்வொரு பம்பியறையினதும் பணிகள் பூர்த்தி செய்யப்படவுள்ள திகதிகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

210/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சீனி எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி சீனியை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சீனி இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

249/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் பன்வில பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கெலாபொக்க தோட்டத்தில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் "உதா கம்மான வீட்டு திட்டம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள —

(i) உதா கம்மான வீட்டுத்திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) உதா கம்மான வீட்டுத்திட்டம் ஒவ்வொன்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒவ்வொரு பயனாளிக்கும் —

(i) வழங்குவதாக இணங்கிய மொத்த நிதித்தொகை;

(ii) வழங்கப்படும் மொத்த தொகையில், கடன் தொகை;

(iii) வழங்கப்படும் மொத்த தொகையில், உதவித் தொகை;

(iv) இதுவரையில் செலுத்தப்பட்டுள்ளதொகை;

வெவ்வேறாக எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஒவ்வொரு பயனாளிக்குமான எஞ்சிய நிதித்தொகையை வழங்கி, இக்கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

11.

343/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு, — (1 )

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பயிர்ச் செய்கை மேற்கொள்கின்ற மொத்த வயற் காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அவற்றுள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயற் நிலங்களின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையிலுள்ள தரிசு வயல் நிலங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அவை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்துவதற்கான திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) பயிர்ச் செய்கைக்குத் தேவையான விதைகள் மற்றும் உரம் போன்றவற்றை உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பயிரரச்செய்கைக்குத் தேவையான இயந்திர சாதனைகள் சலுகை விலை அடிப்படையில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இளந்தலைமுறையினர் கமத்தொழிலில் ஈடுபடாமையின் காரணமாக ஏற்பட்டுள்ள ஊழியப்படை குறைவினை நிவர்த்தி செய்வதற்காக கவர்ச்சிகரமான திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

12.

7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 முதல் இதுவரையில் அழிக்கப்பட்டுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தொல்பொருள் தளங்களை அழித்த நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவையென்பதையும்;

(vi) அழிக்கப்பட்டுள்ள, ஆனால் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அடையாளம் காணப்படாதுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) நாட்டின் வரலாற்று பெருமையை பாதுகாக்கும் தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

55/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள கிராமங்களில், குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இக் கிராமங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

98/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பூகோள காலநிலை மாற்றங்கள் காரணமாக இலங்கையின் காலநிலையில் எதிர் மறையான தாக்கங்கள் ஏற்படுவதையும்;

(ii) அது இலங்கையின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் ஏனைய துறைகளில் நேரடியான தாக்கத்தைச் செலுத்துவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பூகோள காலநிலை போக்குகள் இலங்கைக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விதம் தொடர்பில் புலமைசார் ஆய்வொன்றை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த ஆய்வின் விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு புலமைசார் குழுவொன்று நியமிக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

15.

122/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தென்னை மரங்கள் அகற்றப்படும்போது அவை பெற்றுக் கொடுக்கப்பட்ட தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கெனப் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iv) தென்னை மரமொன்றுக்காக வழங்கப்பட்ட விலை எவ்வளவென்பதையும்;

(v) அதன் மூலம் ஈட்டப்பட்ட பணத்தொகையானது தற்போது எந்த நிறுவனத்தின் வசமுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 செப்தெம்பர் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை இருக்குமாக. மு.ப. 11.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 50(2) மற்றும் 111 ஆகியவற்றின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2020 செப்தெம்பர் 25 ஆம் திகதி முதற்கொண்டு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 50(2) மற்றும் 111 ஆகியன இடைநிறுத்தப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 19 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 19

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கு நேரெதிராக குறிப்பீடு செய்யப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 640,000,000 இருந்து ரூபா. 595,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 20 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 2,400,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 1,500,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 21 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 21

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 40,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 22 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 22

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 440,000,000 இருந்து ரூபா. 360,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

## அட்டவணை

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதியாண்டு 2019 தொடர்பில், 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுக் கட்டளை இலக்கம். 01

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00201, 02001, 02401, 05101, 05201, 05301, 05401, 05501, 05601, 13001, 15801, 20101, 22301, 22401, 22501, 23101, 28301, மற்றும் 33101 ஆகியவை தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் (ரூபா) | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக் குறைந்த எல்லைகள் (ரூபா) | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | பிரதம அமைச்சர் அலுவலகம் | 00201 | 23,000,000 | 21,000,000 | 11,000,000 | 9,500,000 | 77,000,000 | 76,500,000 | 1 |
| 2. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | 18,000,000 | 20,000,000 | 95,000,000 | 115,000,000 | 2 |
| 3. | தேசிய கொள்வனவு ஆணைக்குழு | 02401 | 1,200,000 | 2,100,000 | | | 3,000,000 | 4,000,000 | 3 |
| 4. | டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05101 | | | 2,500,000 | 1,300,000 | | | 4 |
| 5. | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05201 | | | 22,300,000 | 20,000,000 | | | 5 |
| 6. | பொதுவழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05301 | | | 2,500,000 | 170,000 | | | 6 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05401 | | | 4,400,000 | 3,200,000 | | | 7 |
| 8. | வெகுசன ஊடக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05501 | 1,000,000 | 3,500,000 | 200,000 | 2,500,000 | 6,000,000 | 25,000,000 | 8 |
| 9. | விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05601 | | | 300,000 | 120,000 | | | 9 |
| 10. | பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சர் | 13001 | 40,000,000 | 65,000,000 | 23,200,000 | 42,000,000 | 85,000,000 | 206,000,000 | 10 |
| 11. | அரச தொழில் முயற்சிகள், கண்டிய மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் | 15801 | 4,200,000 | 5,700,000 | 2,000,000 | 2,500,000 | | | 11 |
| 12. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 20,500,000 | | | 12 |
| 13. | இலங்கை கடற்படை | 22301 | | | 510,000,000 | 440,000,000 | | | 13 |
| 14. | இலங்கை விமானப்படை | 22401 | | | 418,000,000 | 380,000,000 | | | 14 |
| 15. | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,080,000,000 | 1,060,000,000 | | | 15 |
| 16. | கடன் இணக்க சபைத் திணைக்களம் | 23101 | | | 500,000 | 449,000 | | | 16 |
| 17. | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 28301 | | | 71,000,000 | 66,000,000 | | | 17 |
| 18. | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | | | 275,000,000 | 255,000,000 | | | 18 |

(இக்கட்டளைகள் 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.